# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 09.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண்.SA.16468/F/2024**

திரு க. கலைச்செல்வன் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம், .. பொது அதிகார அமைப்பு
திருமானூர் - 621 715, அரியலூர் மாவட்டம்.

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 13.08.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 19.09.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 17.12.2024 |

*******

**ஆணை**

இவ்வழக்கு இன்று (09.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு க. கலைச்செல்வன் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி இரா. லதா, தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், திருமானூர், அரியலூர் மாவட்டம் என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், அரியலூர் மாவட்டம், திருமானூர் வட்டார வளர்ச்சி அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கீழ்காவட்டாங்குறிச்சி ஊராட்சியில் கடந்த 2020-2021, 2021-2022, 2022-2023, 2023-2024 ஆகிய நிதியாண்டுகளில் கையாளப்பட்ட ஊராட்சி நிதியின் தணிக்கை அறிக்கையின் நகல்கள் மற்றும் அது குறித்த ஆவணங்களை பார்வையிட அனுமதி உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 4 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (09.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கீழ்காவட்டாங்குறிச்சி ஊராட்சியில் கடந்த 2020-2021, 2021-2022, 2022-2023, 2023-2024 ஆகிய நிதியாண்டுகளில் கையாளப்பட்ட ஊராட்சி நிதியின் தணிக்கை அறிக்கையின் நகல்கள் மற்றும் அது குறித்த ஆவணங்களை பார்வையிட அனுமதி வழங்கக் கோரியுள்ளதாகவும், நாளதுவரையில் தனக்கு தகவல்கள் மற்றும் ஆவணங்களை பார்வையிட அனுமதியும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு தகவல்கள் வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்து, அதற்கான ந.க.எண்.ஆ1/2040/2024 நாள் 02.04.2025 தேதியிட்ட ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

***6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், பொதுத் தகவல் அலுவலர், இவ்வாணைக் கிடைக்கப்பெற்ற 15 நாட்களுக்குள், மனுதாரருக்கு அறிவிப்பு கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலை நாளில், வேலை நேரத்தில் இதர அலுவலகப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படாவண்ணம், மனுதாரரை அலுவலகத்திற்கு வரவழைத்து, அவரது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரியுள்ள அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், கீழ்காவட்டாங்குறிச்சி ஊராட்சியில் கடந்த 2020-2021, 2021-2022, 2022-2023, 2023-2024 ஆகிய நிதியாண்டுகளில் கையாளப்பட்ட ஊராட்சி நிதியின் தணிக்கை அறிக்கை தொடர்பான ஆவணங்களை தகவல்களை, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 2(j)-ன்படி ஆஜர்படுத்தி, மனுதாரர் ஆய்வு செய்த பின்னர் அவர் தனக்கு தேவைப்படும் தகவலை குறிப்பிட்டு கோரும்பட்சத்தில் அதனை ஒளிநகலெடுத்து, உரிய சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 சட்டப்பிரிவு 7(6)-ன்கீழ் கட்டணமின்றி வழங்கி, மனுதாரர் தகவல்களை பெற்றுக் கொண்டதற்கான நகல் மற்றும் ஒப்புகை அட்டையின் நகல் ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாக தயாரித்து இவ்வாணையத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண்.SA.16468/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**
பொதுத்தகவல் அலுவலர் /
தலைமையிடத்து துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
திருமானூர் - 621 715, அரியலூர் மாவட்டம்.

**<u>வழக்கு எண்.SA.16468/F/2024</u>**
**<u>மனுதாரர்</u>**
திரு க. கலைச்செல்வன், த/பெ.சி. கருப்பையா,
எண்.4/66, வடக்கு தெரு,
கீழக்காவமடாங்குறிச்சி (கி),
அரியலூர் வட்டம் & மாவட்டம் - 621 715.

Copy to: File
SNPS / 11.04.2025